மாலை பதிப்பு

# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com

10.11.2022 வியாழக்கிழமை supeedsam.com supeedsam@gmail.com

# தமிழ் மக்களின் பிரச்சினைக்கு சுதந்திர தினத்திற்கு முன்பு தீர்வு



## ஜனாதிபதி பாராளுமன்றத்தில் நம்பிக்கை வெளியிட்டார்

வடக்கில் தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு வெளிநாட்டுத் தலையீடுகள் இன்றி அடுத்த ஆண்டு 75ஆவது சுதந்திரக் கொண்டாட்டத்திற்கு முன்னதாக அமைதியான முறையில் தீர்வு காணப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றத்தில் தெரிவித்தார். இலங்கையில் யாரும் தலையிட விரும்பவில்லை எனவும், இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து முன்னோக்கிச் செல்லும் திறன் இலங்கைக்கு இருப்பதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார். அடுத்த வாரம் நடைபெறவுள்ள கலந்துரையாடலுக்கு அனைத்து தமிழ் அரசியல் கட்சிகளுக்கும் அழைப்பு விடுக்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்றம் கூடும் நாட்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும் அல்லது நாட்டின் சட்ட அமைப்பை நவீனமயப்படுத்த வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். சகல சட்ட முறைமைகளையும் இந்த வருடமும் அடுத்த வருடமும் நவீனமயப்படுத்துவதற்காக பாராளுமன்றத்தில் முன்வைக்கும் பணிகள் மேற்கொள்ளப்படும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கை தொடர்பான தீர்மானம் ஐநா பொதுச் சபையில்

**(சில்மியா யூசுப்)**

ஐநா மனித உரிமைகள் பேரவையில் செப்டெம்பர் மாதம் நிறைவேற்றப்பட்ட இலங்கை தொடர்பான தீர்மானம் ஐநா பொதுச் சபையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. மனித உரிமைகள் பேரவையின் தலைவர் தூதுவர் ஃபெடரிகோ வில்லேகாஸ், நியூயோர்க்கில் நடைபெற்ற 77ஆவது பொதுச் சபை அமர்வில் இலங்கை தொடர்பான தீர்மானத்தை முன்வைத்தார். 2022 செப்டெம்பர் 12 முதல் ஒக்டோபர் 7 வரை நடைபெற்ற மனித உரிமைகள் பேரவையின் ஐம்பத்தொன்றாவது அமர்வில் ஐக்கிய நாடுகள் சபையில் முன்வைக்கப்பட்ட தீர்மானங்களில் இலங்கை தொடர்பான தீர்மானமும் உள்ளடங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## சதிகள் வேண்டாம் தேர்தலை நடத்தவும்

**எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ**



எமது நாட்டை ஆபத்தில் ஆழ்த்திய மொட்டு அரசாங்கம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உதவியுடன் மீண்டும் எழுச்சி பெற முயற்சிப்பதாகவும்,நாட்டை அழித்த ராஜபக்சர்களுக்கு மீண்டும் ஆட்சி அதிகாரத்தைப் பெற வெட்கமில்லையா என கேட்பதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், எதிர்வரும் தேர்தலில் நாட்டை அழித்த ராஜபக்ச குடும்பத்திற்கும் மொட்டுவிற்கும் மக்கள் மறக்க முடியாத பதிலை வழங்க தயாராகவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். பல்வேறு ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டு தேர்தலை ஒத்திவைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட

02

## மட்டக்களப்பு வாவி பெருக்கெடுப்பு போக்குவரத்துக்கு பாதிப்பு

**மட்டக்களப்பு**



கடந்த சில நாட்களாக மட்டக்களப்பு மாவட்டத்தில் பெய்துவரும் மழை காரணமாக மாவட்டத்தின் தாழ்நிலப் பிரதேசங்கள் வெள்ள நீரினால் நிரம்ப காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. வெள்ள நீர் அதிகரித்துவரும் காரணத்தினால் வவுனதீவு வலயறவு பாலத்தை

02

## பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டிலிருந்து தனுஷ்க குணதிலக்க விடுபடுவார் எஸ்.பி நம்பிக்கை

**(சில்மியா யூசுப்)**

பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டில் அவுஸ்திரேலியாவில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கிரிக்கெட் வீரர் தனுஷ்க குணதிலக்க, குற்றச்சாட்டில் இருந்து நிச்சயமாக விடுபடுவார் என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திஸ ாநாயக்க தெரிவித்துள்ளார். அவுஸ்திரேலியாவில் ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட கும்பல் இவ்வாறான குற்றச்சாட்டுகளை முன்வைப்பதாகவும், அவர்கள் இதுபோன்ற வழக்குகளில் பணம் பெற திட்டமிட்டுள்ளதாகவும் அவர் கூறுகிறார்.

## பகிடிவதை தொடர்பான விசாரணைகள் சிஐடிக்கு மாற்றம்

02




## திருமலையில் திடீரென தீப்பிடித்த சொகுசு கார்



**திருமலை ரவ்பீக் பாயிஸ்**

திருகோணமலை கண்டி பிரதான வீதியில் திடீரென சொகுசு கார் ஒன்று தீப்பிடித்ததாக திருகோணமலை தலைமையக பொலிசார் தெரிவித்தனர். திருகோணமலை கண்டி பிரதான வீதியில் ஆண்டாங்குளம் பிரதேசத்தில் இன்று (10) பிற்பகல் 2 மணியளவில் குறித்த சொகுசு கார் தீப்பிடித்ததாக தெரியவருகின்றது. குறித்த காரில் சாரதி மாத்திரம்

02



## மட்டக்களப்பு வாவி பெருக்கெடுப்பு

ஊடறுத்து வெள்ளநீர் பரவிச் செல்வதனால் அன்றாட போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. அதேவேளை வவுனதீவு வாவியினை அண்டிய பகுதிகளில் உள்ள வயல் நிலங்களும் வெள்ள நீரினால் மூள்கியுள்ளது. அத்தோடு மட்டக்களப்பு விமான நிலையத்திற்கு முன்பாக உள்ள வீதியையும் குறுக்கறுத்து ஆற்று நீர் பரவி செல்வதனால் போக்குவரத்தில் சிரமம் நிலவி வருகின்றது. அதேபோன்று மட்டக்களப்பு வாவியில் நீர் நிறம்பியுள்ளமையினால் மட்டக்களப்பு வாவியை அண்மித்துள்ள பல வீதிகள் நீரினால் நிறம்பியுள்ளமையினால் பொதுமக்களின் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளதுடன், மீனவர்களது மீன்பிடி தோணிகளை கரையேற்றி வைப்பதற்கு பாரிய சிரமத்தினை எதிர்நோக்கி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## திருமலையில் திடீரென தீப்பிடித்த சொகுசு கார்

பயணித்திருந்ததாகவும் கார் தீப்பிடித்ததில் கார் பகுதியளவில் சேதமடைந்துள்ளதாகவும் குறித்த காரில் ஏற்பட்ட தீப்பரவளை பொது மக்களின் உதவியுடன் தீ கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்ததாகவும் குறித்த காரில் தீப்பறவியமைக்கான காரணம் இதுவரை தெரிய வராத நிலையில் மேலதிக விசாரணைகளை திருகோணமலை தலைமையக போலீசார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சதிகள் வேண்டாம் தேர்தலை நடத்தவும்

போதும் மக்கள் தேர்தலையே கோருகின்றனர் எனவும்,எனவே ஒரு சிறந்த சமூகவாதியாக இருந்தால் தேர்தலை ஒத்திவைக்காமல் உடனடியாக தேர்தலை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும் என எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் மகிந்த தேசப்பிரியவிடம் கோரிக்கை விடுப்பதாகவும்,அரசாங்கத்தின் தேர்தலை ஒத்திவைக்கும் சதியில் தாம் பங்குதாரராக வேண்டாம் என கேட்டுக்கொள்வதாகவும் அவர் தெரிவித்தார். நொச்சியாகம பிரதேசத்தில் அன்மையில் இடம் பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் அநுராதபுரம் மேற்கு தேர்தல் தொகுதிக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். பத்தலேகொட ஆராய்ச்சி நிறுவனம் 11 வருடங்களில் 22 பருவ போக நெற்செய்கை தொடர்பாக மேற்கொண்ட ஆய்வின் மூலம் பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம்,நெற் செய்கைக்கு சேதன பசளைகளை மாத்திரம் பயன்படுத்தினால்,நெற் செய்கையின் விளைச்சல் 21.5 இல் இருந்து 31 சதவீதமாக குறையும் என கண்டறியப்பட்டுள்ளதாகவும், அதுமட்டுமல்லாமல்,நெல் விளைச்சலை அதிகபட்ச நிலைக்குக் கொண்டு செல்லக்கூடிய முறையானது,நெற் செய்கைக்கு சேதன மற்றும் இரசாயன உரங்களின் கலவையிலான செய்கையே எனவும் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இந்த தரவுகள் அனைத்தும் அரசியல்வாதிகளாலன்றி, இந்நாட்டின் புத்திஜீவிகளாலையே கண்டறியப்பட்டதாகவும் தெரிவித்தார். இருந்தும்,கோட்டாபய ராஜபக்சவின் அரசாங்கம் இந்த அறிக்கைகளை புறக்கணித்து நெற் செய்கை,தேயிலைச் செய்கை மற்றும் பழ உற்பத்திச் செய்கை போன்ற அனைத்து பயிர்களுக்கும் வழங்கப்பட உரங்களை தடை செய்ததாகவும்,இதன் மூலம் விவசாயத்தில் ஈடுபட்டு வந்த விவசாயிகளின் வாழ்வு பறிபோனதாகவும்,இதனால் கடந்த பெரும் போக விளைச்சல் 50 சதவீதத்தால் வீழ்ச்சி கண்டதாகவும் தெரிவித்தார். அத்துடன் தற்போதைய ஜனாதிபதி கூறுவது போன்று 10,000 ரூபாவிற்கு அதிகபட்ச உரம் கிடைத்தாலும்,அது ஒரு ஊடக அறிக்கையாக அல்லது ஜனாதிபதியின் உரையாக மட்டுமே உள்ளதாகவும்,அது நடைமுறையில் சாத்தியமற்ற ஒன்றாகப்போயுள்ளதாகவும் தெரிவித்தார். பெரும் வரலாற்றைக் கொண்டிருந்த எமது நாடு மொட்டுவினால் வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

இவ்வாறு சேதம் விளைவித்த கட்சியையும் ராஜபக்சவையும் பாதுகாக்கும் நிலைக்கு தற்போதைய அரசாங்கமும் ஜனாதிபதியும் முன் வந்திருப்பதாகவும்,இந்த அரசாங்கத்தை மக்கள் நிராகரிப்பதாகவும்,எனவே உடனடியாக தேர்தலொன்றே தேவை எனவும் தெரிவித்த எதிர்க்கட்சி தலைவர்,மக்களின் அந்த ஜனநாயக உரிமைக்காக எதிர்க்கட்சி எந்நேரத்திலும் முன் நிற்பதாகவும் தெரிவித்தார்.

## பகிடிவதை தொடர்பான

பகிடிவதை தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. பொலிஸ் மா அதிபரின் உத்தரவுக்கமைய இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது. இதன்படி, பொலிஸ் நிலையங்களில் பெறப்படும் முறைப்பாடுகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு விசாரணைக்காக அனுப்பி வைக்குமாறு பொலிஸ் மா அதிபர் அனைத்து சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளார்.

# மட்டக்களப்பு பெரியகல்லாற்றில் 7வீதிகளுக்கு பெயர்பலகை




மட்டக்களப்பு பெரியகல்லாற்றில் 7வீதிகளுக்கு பெயர்பலகைகள் இடப்பட்டு,திறந்து வைக்கும் நிகழ்வு இடம்பெற்றது. களுவாஞ்சிகுடி பிரதேசசெயலாளர்பிரிவுக்குட்பட்ட பெரியகல்லாறு ஒலிம்பியா விளையாட்டு கழகத்தின் ஏற்பாட்டில் கிராமத்தில் அமரத்துவமடைந்த இராசநாயகம் மேரிநாயகி குடும்பத்தினர் மற்றும் ஜோர்ஜ் அன்ரன் ஆகியோர்களின் முழுமையான நிதி அனுசரணையுடன் பெரியகல்லாறு கிராமத்தில் உள்ள வீதிகளுக்கு வர்த்தகமானி மூலம் பெயர்கள் பதிவு செய்யப்பட்டு பெயர்பலகைகள் இடப்படும் நிகழ்வும்,மற்றும் திறந்து வைக்கும் நிகழ்வும் புதன்கிழமை(9)பிற்பகல் 2:00 மணியளவில் ஒலிம்பியா விளையாட்டுக்கழகத்தின் தலைவர் இரா.கோபாலசிங்கம் தலைமையில் இடம்பெற்றது.

இதன்போது ஜோர்ஜ் வீதியில் இருந்து ஆரம்பமாகி பெரியகல்லாற்றின் தெற்கு எல்லையில் உள்ள மதுரம் வீதி வரையான 7வீதிகளுக்கு இவ்வாறு பெயர்பலகை நடப்பட்டது.இந்நிகழ்வில் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.பிரகாஸ் ,மண்முனை தென் எருவில் பற்று களுதாவளை பிரதேசசபை தவிசாளர் ஞா.யோகநாதன்,பிரதேச சபை உறுப்பினர்களான எஸ்.கணேசநாதன்,எம். மேகராஜ்,பிரதேச சபை செயலாளர் ,மற்றும் அதிகாரிகள், கிராமத்தில் உள்ள ஆலய வண்ணக்கர்,விளையாட்டு கழகங்கள்,கோயில் தலைவர்கள்,மதத் தலைவர்கள், கிராமத்தில் உள்ள முக்கிய நபர்கள், போன்றவர்களால் வைபவ ரீதியாக முதல் நிகழ்வாக ஜோர்ஜ் வீதி திறந்து வைக்கப்பட்டுள்ளதுடன் மேலும் 6வீதிகளுக்கு பெயர்ப்பலகை இடப்பட்டுள்ளது.

# விவசாயிகளுக்கு கரம் கொடுக்கும் கிழக்கு பல்கலைக்கழகம்



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தொழில் மற்றும் சமூக இணைப்பிற்கான மையம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனம் என்பன இணைந்து "பொருளாதார நெருக்கடி மற்றும் ஒருங்கிணைந்த விவசாயத்திற்கான தீர்வுகள்" எனும் தொனிப்பொருளில் மாவட்ட விவசாயிகளின் எதிர்கால நன்மை கருதிய விசேட கலந்துரையாடலொன்று இன்று (10) திகதி மட்டக்களப்பில் இடம்பெற்றது.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தொழில் மற்றும் சமூக இணைப்பிற்கான மையத்தின் பணிப்பாளரும் கிழக்குப் பல்கலைக்கழக வைத்திய சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீட சிரேஸ்ட விரிவுரையாளருமான வைத்திய கலாநிதி கே.அருளானந்தம் தலைமையில் கிழக்கு பல்கலைக்கழக வைத்திய சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீட அரசடி வளாகத்தின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற குறித்த விசேட கலந்துரையாடலிற்கு விசேட விருந்தினர்களாக கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் வல்லிபுரம் கணகசிங்கம், மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் கே.ஜெகன்நாத், கிழக்கு பல்கலைக்கழகத்தின் பதிவாளர் ஏ.பகீரதன், மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனத்தின் விவசாயப் பிரிவிற்கான தலைவரும் மட்டக்களப்பு தமிழ் சங்கத்தின் தலைவருமான வீ.ரஞ்சிதமூர்த்தி, மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனத்தின் விவசாயப் பிரிவிற்கான செயலாளர் அருளானந்தராஜா ரமேஸ் உள்ளிட்டோர் கலந்துகொண்டு கலந்துரையாடலில் ஈடுபட்டுள்ளனர்.

தற்போதைய சூழலில் பாரிய சவாலுக்குள்ளாகி வரும் நிலையிலுள்ள விவசாயத்தையும் அதனை மேற்கொள்ளும் விவசாயிகளுக்குமான தீர்வை பெற்றுக்கொடுக்கும் நோக்கில் இடம்பெற்ற குறித்த ஆரம்பக்கட்ட கலந்துரையாடலின்போது விவசாயத்துறை சார்ந்து மேற்கொள்ளப்பட வேண்டிய ஆய்வுகள், விவசாயத்துறைக்காக கிழக்குப் பல்கலைக்கழத்தினால் ஆற்றப்படவுள்ள சேவைகள், கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தொழில் மற்றும் சமூக இணைப்பிற்கான மையத்தினால் விவசாய துறைக்காக ஆற்றப்படவுள்ள விடயங்கள், நவீன முறையிலான விவசாய திட்டத்தினை நடைமுறைப்படுத்துதல் தொடர்பான விடயங்கள், காலநிலை மற்றும் ஒட்டு முறைகள், சுகாதாரமான உணவு உற்பத்தி தொடர்பான மேலும் பல விடயங்கள் தொடர்பாக இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், வளவாண்மைகளும் அனுபவப்பகிர்வுகளும் இடம்பெற்றிருந்தது. இக்கலந்துரையாடலில் வைத்திய நிபுணர் அருள்ஜோதி, கரடியனாறு விதைப்பண்ணையின் பிரதிப்பணிப்பாளர் சிவநேசன், தொழில்நுட்ப ஆலோசகர் நாகலிங்கம் சுரேஸ்குமார், விவசாய அமைப்புக்களின் பிரதிநிதிகள், விவசாயிகள் உள்ளிட்ட துறைசார் திணைக்களங்களின் அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டுள்ளனர்.

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தொழில் மற்றும் சமூக இணைப்பிற்கான மையம் ஆரம்பிக்கப்பட்ட நாள் தொடக்கம் சமூகம் சார்ந்த பல்வேறுபட்ட செயற்பாடுகளை கிழக்குப் பல்கலைக்கழகம் ஆற்றிவருகின்றதுடன் அதன் ஒரு செயற்பாடாகவே விவசாயத்துறையை கட்டியெழுப்பும் நோக்கில் இன்றைய கலந்துரையாடல் இடம்பெற்றதாக கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தொழில் மற்றும் சமூக இணைப்பிற்கான மையத்தின் பணிப்பாளரும் கிழக்குப் பல்கலைக்கழக வைத்திய சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீட சிரேஸ்ட விரிவுரையாளருமான வைத்திய கலாநிதி கே.அருளானந்தம் இதன்போது தெரிவித்தார்.



நிதியுதவி
NH INVESTMENT & SECURITIES

# அருந்ததி இணைய திருமண சேவை

Since 2014

## அருந்ததி
இணைய திருமண சேவை

www.arunthathee.com
+94 777 164 524

### மணமகன் விபரம் (மணமகள் தேவை)

**25096 | வே | 1984**
சாவகச்சேரி | இந்து | BDS
MD | Doctor(Dentist)
ரேவதி (மீனம்) | USA
182 செ.மீ

**25267 | வே | 1990**
நெல்லியடி | இந்து | MD
Asst. Manager
புனர்பூசம் (மிதுனம்)
182 செ.மீ

**25150 | வே | 1991**
கிளிநொச்சி | இந்து | A/L
Finance Manager
உத்தரட்டாதி (மீனம்)
152 செ.மீ

**25108 | வே | 1989**
மூளாய் | இந்து | BSc
Network Engineer
அத்தம் (கன்னி)
167 செ.மீ | செவ்: 12

**25211 | வே | 1990**
மட்டக்களப்பு | இந்து | BSc
Manager | UK
ரோகிணி (ரிஷபம்)
165 செ.மீ | செவ்: 12

**25254 | வே | 1978**
நாவற்குடா | இந்து | Diploma
Forklift Driver | Australia
அஸ்வினி (மேடம்)
173 செ.மீ

**25242 | வே | 1992**
வவுனியா | இந்து | MD
Civil Eng.Project Manager
கார்த்திகை (ரிஷபம்)
168 செ.மீ

**25223 | மு.கா | 1992**
இரத்தினபுரி | இந்து | BD
Software Engineer
சதயம் (கும்பம்)
170 செ.மீ

**25235 | வே | 1991**
சாவகச்சேரி | இந்து | BD
Service Specialist
பூரம் (சிம்மம்) | UK
164 செ.மீ | செவ்: 04

**25239 | கு | 1991**
பருத்தித்துறை | இந்து
Civil Engineer | BSc
உத்தரட்டாதி (மீனம்)
172 செ.மீ | சூ.செவ்: 10

**14850 | வே | 1986**
காரைநகர் | இந்து | UK
MBA | Engineer
அவிட்டம் (மகரம்)
170 செ.மீ

**25214 | வி | 1988**
மட்டக்களப்பு | இந்து
Business | A/L | France
உத்தராடம் (மகரம்)
170 செ.மீ

**25087 | வே | 1986**
கரம்பொன் | இந்து | MD
Consultant Software eng
பூசம் (கடகம்) | Ghana
178 செ.மீ

**25241 | வே | 1994**
சுன்னாகம் | இந்து
Supervisor | Diploma
மிருகசீரிடம் (ரிஷபம்)
170 செ.மீ | செவ்: 12

**25105 | வே | 1990**
மானிப்பாய் | இந்து | Higher
Diploma | Manager
திருவோணம் (மகரம்) | Aus
165 செ.மீ | Divorced

### மணமகள் விபரம் (மணமகன் தேவை)

**25099 | வே | 1983**
மட்டக்களப்பு | இந்து | B.Com
Accounting Lead | கனடா
கார்த்திகை (ரிஷபம்)
157 செ.மீ | Divorced

**25183 | வே | 1996**
வரணி | இந்து | MBBS
Student (Final year)
பூரம் (சிம்மம்)
161 செ.மீ

**25247 | வே | 1993**
யாழ்நகர் | RC | MSc
Development Officer
உத்தரம் (கன்னி)
155 செ.மீ

**25193 | கோ | 1993**
கரணவாய் | இந்து | Aus
Master - Environment &
Climate Emergency
அஸ்வினி (மேடம்) | 175 செ.மீ

**25114 | வே | 1991**
நல்லூர் | இந்து | BD
Software Engineer
ரோகிணி (ரிஷபம்)
155 செ.மீ | சூ.செவ்: 10

**14905 | வே | 1989**
பலாலி | இந்து | A/L
Medical Lab Assistant
மிருகசீரிடம் (மிதுனம்)
160 செ.மீ

**15146 | வே | 1988**
சுதுமலை | இந்து
MBBS | Doctor
உத்தராடம் (மகரம்)
168 செ.மீ

**25217 | வே | 1997**
கொக்குவில் | இந்து
Diploma | Job Seeker
ரேவதி (மீனம்)
153 செ.மீ

**25117 | வே | 1994**
மல்லாகம் | இந்து | BSc
Medical Lab Assistant
ஆயிலியம் (கடகம்)
165 செ.மீ

**25093 | வே | 1993**
கோப்பாய் | RC | MSc
Associate Specialized
Solutions Analyst
உத்தராடம் (தனுசு) | 160 செ.மீ

**15179 | வே | 1992**
காரைநகர் | இந்து | CIMA
Tax Associate
திருவாதிரை (மிதுனம்)
160 செ.மீ | செவ்: 12

**25190 | வே | 1989**
மட்டக்களப்பு | RC | BD
Development Officer
மகம் (சிம்மம்)
152 செ.மீ | செவ்: 01

**15248 | வே | 1988**
கரவெட்டி | இந்து | BA
Social Media
Coordinator | பூரம் (சிம்மம்)
170 செ.மீ | UK

**25159 | ப | 1998**
நெல்லியடி | இந்து
Diploma | Maths Teacher
மகம் (சிம்மம்)
158 செ.மீ | சூ.செவ்: 07

**15173 | வே | 1995**
வவுனியா | இந்து | BD
Research Assistant
ரேவதி (மீனம்)
164 செ.மீ

## இந்தியாவிலிருந்து பிரபல ஜோதிடர் பட்டுக்கோட்டை சுப்ரமணியன்



அவர்கள் நவம்பர் 20 முதல் 27 வரை இலங்கையில்,
உங்கள் ஜாதக பலன்களை அறிந்துகொள்வதற்கு
முன்பதிவு செய்ய அழையுங்கள் 074 172 4524

077 716 4524 | www.arunthathee.com
18, ராமகிருஸ்ணா அவினியு, வெள்ளவத்தை | 20 கே.கே.எஸ் வீதி கொக்குவில்

# அருந்ததி வழங்கிய மாற்று மோதிர நிகழ்வில்
# BLOOMING BEAUTY CARE
# A.THARMIKA
# அவர்களின் மணப்பெண் அலங்கார காட்சி








08th of January 2023
Contact 076 9759197
At BMICH MAIN HALL



# யானையின் தாக்குதலுக்கு உள்ளான இளம் குடும்ப பெண்ணொருவர் பலி



**வி.சுகிர்தகுமார்**

ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட கண்ணகிகிராமத்தில் யானையின் தாக்குதலுக்கு உள்ளான இளம் குடும்ப பெண்ணொருவர் இன்று (10) அதிகாலை படு காயமடைந்து உயிரிழந்த நிலையில் இரு வீடுகளும் சேதமாக்கப்பட்டன. மேலும் யானையின் தாக்குதலுக்கு உள்ளான உயிரிழந்தவரின் தாயாரும் காயங்களுக்கு உள்ளான நிலையில் அக்கரைப்பற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன் இரு பிள்ளைகளும் சிறு காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர். உயிரிழந்தவர் கண்ணகிகிராமம் 01 இல் வசித்துவந்த 31 வயதுடைய இரு பிள்ளைகளின் தாயான நாகராசா சுலசுனா என தெரியவருவதுடன் சடலம் அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது இன்று அதிகாலை கிராமத்தினுள் புகுந்த யானையொன்று வீடொன்றை முற்றாக சேதமாக்கிய பின்னர் வீதி அருகில் இருந்த இன்னுமொரு வீட்டினுள் நுழைந்து வீட்டை சேமாக்கியுள்ளது. சத்தம் கேட்ட நிலையில் வெளியே வந்த குறித்த பெண் யானையை கண்டு அதிர்ச்சியடைந்த நிலையில் யானையை விரட்டி தனது பிள்ளைகளை காப்பாற்றுவதற்காக முயற்சித்தபோது யானையின் தாக்குதலுக்கு உள்ளானார். இந்நிலையில் தாக்குதலுக்குள்ளான பெண்ணின் மூத்த பிள்ளை அடிபட்டு வீழ்ந்த தாயை காப்பாற்ற முயற்சித்தபோதும் பயனளிக்காத நிலையில் தாயின் உத்தரவிற்கு அமைய வெளியே ஓடியுள்ளார். இந்நிலையில் இளைய பிள்ளையினை தும்பி கையால் யானை தூக்கியபோதும் அதிலிருந்து குறித்த பிள்ளை அதிஷ்டவசமாக தப்பியதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஆயினும் அயலவர்களும் உயிரிழந்த பெண்ணின் தாயும் கூக்குரலிட்டு யானையை விரட்ட முயற்சித்தபோதும் மீண்டும் யானை பெண்ணை தாக்கிவிட்டு வெளியேறி சென்றுள்ளது. இந்நிலையில் படுகாயமடைந்த பெண்ணை கிராமத்தவர்கள் இணைந்து வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நிலையில் அவர் உயிரிழந்துள்ளார். சம்பவம் நடைபெற்றபோது தம்மை காப்பாற்ற யாரும் முன்வரவில்லை என்பதுடன் அருகில் இருந்த இராணுவத்தினரும் ஒத்துழைப்பு வழங்கவில்லை என உயிரிழந்த பெண்ணின் தாய் அழுது புலம்பினார்.

குறித்த சம்பவம் தொடர்பில் அறிந்து கொண்ட ஆலையடிவேம்பு பிரதேச செயலாளர் வி.பபாகரன் தலைமையிலான பிரதேச செயலக உத்தியோகத்தர் குறித்த இடங்களுக்கு சென்று நேரில் பார்வையிட்டதுடன் உயர் அதிகாரிகளுக்கும் அறிய கொடுத்துள்ளனர். அத்தோடு பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான நட்ட ஈட்டினை வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளதுடன் யானை தொல்லையிலிருந்து மக்களை பாதுகாப்பதற்கான அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பிலும் நடவடிக்கை எடுக்கவுள்ளதாகவும் தெரிவித்தனர். அன்மைக்காலமாக கண்ணகிகிராமம் உள்ளிட்ட அயலில் உள்ள சிறு கிராமங்களிலும் யானையின் தொல்லை அதிகரித்து வருகின்றமையும் இதனால் அங்கு வாழும் மக்களும் விவாசாய செய்கையில் ஈடுபடும் விவசாயிகளும் அச்சத்தில் உறைந்து போயுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் தொடர்ந்தும் அதிக மழை வீழ்சி பதிவு, குளங்களின் நிர்மட்டமும் உயர்வு



**(ரக்ஸனா)**

வடகீழ் பருவப்பெயற்சி மழை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்நிலையல் மட்டக்கள்பபு மாவட்டதில் தாழ் நிலங்களில் வெள்ளம் தேங்கியுள்ளது. இதனால் மக்களில் இயல்பு வாழ்விலும் சற்று தழம்பல் ஏற்பட்டுதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இந்நிலையில் பெய்துவரும் மழை காரணமாக மாவட்டத்திலுள்ள குளங்களின் நீர்மட்டமும் உயர்ந்துள்ளன. அந்த வகையில் உன்னிச்சைக் குளத்தின் நீர்மட்டம் 23அடி 2 அங்குலம், உறுகாமம் குளத்தின் நீர்மட்டம் 16அடி, வாகனேரிக்குளத்தின் நீர்மட்டம் 16அடி, கட்டுமுறிவுக்குளத்தின் நீர்மட்டம் 11அடி 9அங்குலம், கித்துள்வெவ குளத்தின் நீர்மட்டம் 7அடி 8 அங்குலம், வெலிக்காக் கண்டிய குளத்தின் நீர்மட்டம் 14அடி, வடமுனைக் குளத்தின் நீர்மட்டம் 8அடி 4 அங்குலம், புணாணை அணைக்கட்டின் நீர்மட்டம் 4அடி 3 அங்குலமாகவும் உயர்ந்துள்ளதாக அக்குளங்களுக்குப் பொறுப்பான நீர்ப்பாசனப் பொறியியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் வியாழக்கிழமை(10) காலை 8 மணிவரையில் கடந்த 24 மணித்தியாலத்தில் மட்டக்களப்பில் 54.6மில்லி மீற்றர் மழைவீழ்ச்சி, நவகிரிப்பகுதியில் 58 மீற்றர் மழைவீழ்ச்சி, தும்பங்கேணிப் பகுதியில் 22.5 மீற்றர் மழைவீழ்ச்சி, மைலம்பாவெளிப்பகுதியில் 43.4 மீற்றர் மழைவீழ்ச்சி, பாசிக்குடாப் பகுதியில் 26.6 மீற்றர் மழைவீழ்ச்சி, கிரான் பகுதியில் 35.2 மீற்றர் மழைவீழ்ச்சி, உன்னிச்சைப் பகுதயில் 35 மீற்றர் மழைவீழ்ச்சி, உறுகாமம் பகுதியில் 31.5 மீற்றர் மழைவீழ்ச்சி, வாகனேரிப்பகுதியில் 12.4 மீற்றர் மழைவீழ்ச்சி, கட்டுமுறிவுப் பகுதியில் 37.5 மீற்றர் மழைவீழ்ச்சி, கல்முனையில் 17.1 மீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளதாக வானிலை அவதான நிலையத்தின் மட்டக்களப்பு நிலையப் பொறுப்பத்திகாரி சு.ரமேஸ் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் மட்டக்களப்பு வாசியின் நீர்மட்டம் உயர்ந்துள்ளதையடுத்து, வெட்டப்பட்டப்பட்டுள்ள பெரியகல்லாறு முகத்துவாரத்தினால் ஆற்றுநீர் கடலை நோக்கி மிகவும் வேகமாக கரைபுரண்டு வழிந்தோடுவதையும் அவதானிக் முடிகின்றது.

# வின்சென்ட் உயர்தர பெண்கள் பாடசாலையில் தேசிய சாதனை படைத்த மாணவர்களை கௌரவிப்பு



**ந.குகதர்சன்**

மட்டக்களப்பு வின்சென்ட் உயர்தர பெண்கள் பாடசாலை தேசிய ரீதியிலான தமிழ்த்தின போட்டியில் சாதனை படைத்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று வியாழக்கிழமை(10)காலை 9.00 மணியளவில் இடம்பெற்றது. இப்போட்டிகள் கடந்த 07 ஆம் திகதி கொழும்பில் இடம்பெற்றது. இலக்கிய நாடகம், தனி நடனம் பிரிவு –5, விவாதப்போட்டி என்பனவற்றில் வின்சென்ட் உயர்தரப் பெண்கள் தேசிய பாடசாலை மாணவர்கள் பங்குபற்றினார்கள். இதன்போது இலக்கிய நாடகம் போட்டியானது தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப்பெற்று தங்கப்பதக்கத்தையும், தனிநடனம் பிரிவு–5 இல் பங்குபற்றி இரண்டாம் இடத்தைப்பெற்று வெள்ளிப்பதக்கத்தையும், விவாதப்போட்டியில் பங்குபற்றி மூன்றாம் இடத்தைப்பெற்று வெண்கலப்பதக்கத்தையும் பெற்று பாடசாலைக்கும், பெற்றோருக்கும் புகழை ஈட்டித் கொடுத்திருக்கின்றார்கள். இவ்வாறு சாதனை படைத்த மாணவர்களுக்கு பதக்கங்கள் அணிவித்து, சான்றீதழ்கள் வழங்கி இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.

முதலில் சாதனை படைத்த மாணவர்கள் மட்டக்களப்பு நகர் பகுதியிலிருந்து மாலைகள் அணிவிக்கப்பட்டு,பாண்ட் வாத்திய இசை முழங்க பாடசாலைக்கு அழைத்து வரப்பட்டனர். இந்நிகழ்வில் மட்டக்களப்பு வலய கல்வி பணிப்பாளர் திருமதி சுஜாத்தா குலேந்திரகுமார்,பிரதிக்கல்வி பணிப்பாளர் திருமதி.சாமினி ரவிராஜ்,பாடசாலை முதல்வர் திருமதி. தவத்திருமகள் உதயகுமார், வின்சென்ட் உயர்தர பெண்கள் பாடசாலையின் பழைய மாணவர் சங்கத்தலைவி திருமதி. தர்ஷினி சுந்தரரேசன், மற்றும் தமிழ்மொழித்தினப் போட்டியை தயார்படுத்திய ஆசிரியர்கள்,பகுதித்தலைவர்கள், பிரதியதிபர்கள்,ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் என பலரும் கலந்துகொண்டார்கள்.

# ஓமானுக்கு விரைந்த குற்றப்புலனாய்வுப்பிரிவினர்

**(சில்மியா யூசுப்)**

ஓமானுக்கு வீட்டுப் பணியாளர்களாக அனுப்பப்பட்ட இலங்கைப் பெண்கள் துன்புறுத்தப்பட்டமைதொடரபான விசாரணைகளின் ஒரு பகுதியாக சிஐடியின் துப்பறியும் குழுவொன்று ஓமனுக்கு விஜயம் செய்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எஸ்எஸ்பி நிஹால் தல்துவா தெரிவித்தார். இந்த மோசடி நடவடிக்கையின் விளைவாக ஓமானில் சிக்கியிருந்த 45 இலங்கைப் பெண்களை இந்த குழுவினர் சந்தித்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

ஓமானில் பெண்கள் அவர்களின் வயது மற்றும் தோற்றத்திற்கு ஏற்ப வரிசையாக நிறுத்தப்பட்டு, பாலுறவு நடவடிக்கைகளில் ஈடுபட ஏலம் மூலம் விற்கப்படுவது தெரியவந்தது. விசாரணைக் குழுவினரால் சந்தித்த 45 பெண்களும் தற்போது ஓமானில் உள்ள இலங்கை தூதரகத்தில் உள்ள பாதுகாப்பு மையத்தில் வைக்கப்பட்டுள்ளதாக எஸ்எஸ்பி நிஹால் தல்துவா தெரிவித்தார். குற்றப் புலனாய்வுப் பிரிவின் விசாரணை அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னர் தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் தெரிவித்துள்ளது.

# ஊடக ஒருங்கிணைப்பு அதிகாரிகளுக்கான பயிற்சி பட்டறை

**தலவாக்கலை பி.கேதீஸ்**

மத்திய மாகாணத்தின் அரச சேவையிலுள்ள ஊடக ஒருங்கிணைப்பு அதிகாரிகளுக்கான பயிற்சி பட்டறையொன்று கண்டி பல்லேகல முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. மத்திய மாகாண ஆளுநர் சட்டத்தரணி லலித் யு.கமகே தலைமையில் இச்செயலமர்வு நடைப்பெற்றது. மத்திய மாகாணத்தின் அபிவிருத்திச் செய்திகளை பிரபலப்படுத்துவதற்கு உயர் மட்டத்தில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்கள் மற்றும் அபிவிருத்திப் பணிகளை மக்களிடம் கொண்டு செல்லும் நோக்குடனும் இந்த செயலமர்வு இடம்பெற்றது. இதன்போது மத்திய மாகாண பிரதம செயலாளர் காமினி ராஜரத்ன, ஆளுநரின் செயலாளர் அன்டன் திலகரத்ன, பிரதி பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) சந்தன விக்ரமசூரிய, முகாமைத்துவ அபிவிருத்தி பயிற்சி பிரிவின் பணிப்பாளர் திலினி தெஹிகொல்ல மற்றும் அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் ஊடக இணைப்பாளர்கள் ஆகியோர் கலந்துக்கொண்டனர்.

# கனடாவில் இடம்பெற்ற ஜிம்னாஸ்டிக் போட்டியில் தென்மராட்சி சிறுமி சாதனை



**த.சுபேசன்**

கனடா– ஒன்ராறியோ மாகாணத்தில் கடந்த 06ஃ11 ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஜிம்னாஸ்டிக் போட்டியில் தென்மராட்சி–கைதடி நுணாவிலை பிறப்பிடமாகக் கொண்ட செல்வி அபிசா அகிலகுமாரன் முதலிடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தை வெற்றி கொண்டுள்ளார். 12வயதிற்கு உட்பட்டவர்களுக்கான 2022ஆம் ஆண்டிற்கான ஜிம்னாஸ்டிக் போட்டியிலேயே தென்மராட்சி சிறுமி அபிசா முதலாமிடத்தினைப் பெற்றுள்ளார். இந்நிலையில் கனடாவில் இடம்பெற்ற **tamil mirror awards gala night** நிகழ்வில் அபிசா அகிலகுமாரன் கௌரவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# நீலையூர் சுதாவின் "கிடுகு வீடு" நூல் அறிமுக விழா



**அபு அலா**

பைந்தமிழ்ச் சுடர் நீலையூர் சுதாவின் "கிடுகு வீடு" நூல் அறிமுக விழா நேற்று (09) திருகோணமலை நகரசபை மண்டபத்தில் கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளர் (திருமதி) சரண்யா சுதர்சன் தலைமையில் இடம்பெற்றது. இவ்வறிமுக விழாவுக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பிஸ். ரத்ணாயக்க முதன்மை விருந்தினராகவும், திருகோணமலை மாவட்ட செயலாளர் பீ.எச். என்.ஜயவிக்ரம, சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே.முரளிதரன், கல்வி அமைச்சின் செயலாளர் எச்.ஈ.எம். டபிள்யூ.ஜீ.திசாநாயக்க, வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ஏ.எச்.எம். அன்சார், பிரதிப் பிரதம செயலாளர் (நிர்வாகம்) ஏ.மன்சூர், பிரதிப் பிரதம செயலாளர் (ஆளணி மற்றும் பயிற்சி) (திருமதி) ஆர்.யூ.ஜலீல் மற்றும் கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி (திருமதி) இ.ஸ்ரீதர் உள்ளிட்ட பலர் கௌர விருந்தினராகவும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இதன்போது, கலை கலாசார நிகழ்வுகளும் இடம்பெற்றபோடு புதிதாக நியமிக்கப்பட்ட கிழக்கு மாகாண பிரதம செயலாளர் ஆர்.எம்.பிஸ். ரத்ணாயக்காவுக்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# பெருந்தோட்டத் தொழிலாளர்களை அரச தொழிலாளர்களாக உள்வாங்கப்பட வேண்டும்

**தலவாக்கலை பி.கேதீஸ்**



பெருந்தோட்டத் தொழிலாளர்களை அரச தொழிலாளர்களாக அரசாங்கத்துக்குள் உள்வாங்கப்பட வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளரும் முன்னாள் மத்திய மாகாணசபை உறுப்பினருமான ஆர். இராஜாராம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தெரிவிக்கையில், கடந்த 200 வருடங்களாக பெருந்தோட்ட தொழிலாளர்களாக தொழில் புரியும் தோட்டத்தொழிலாளர்கள் இன்றும் நாட் கூழிகளாகவும் அடிமைகளாகவே தோட்ட நிர்வாகங்கள் வழி நடத்துகின்றனர்.இந்த நாட்டிற்கு வெளிநாட்டு டொலர் வருமானத்தை பெற்றுக்கொடுக்கும் பெருந்தோட்ட தொழிலாளர்களை அரசாங்க தொழிலாளர்களாக உள்வாங்க வேண்டும். அரசாங்கமும் முதலாளிமார் சம்மேளனமும் பேச்சுவார்த்தை நடாத்தி ஒரு புரிந்துணர்வு வேலைத்திட்டத்தின் கீழ் தோட்டத் தொழிலாளர்களை அரச தொழிலாளர்களாக அங்கிரிக்கப்பட வேண்டும். கடந்த 1992 ஆம் ஆண்டுக்கு முன் வாழ்கை செலவு புள்ளிக்கேற்ப சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் கடந்த 1992 ஆம் ஆண்டு முதல் இரண்டு வருடத்திற்கு ஒரு முறை சம்பளம் அதிகரித்தால் போதும் என கூட்டு ஒப்பந்தம் செய்துக் கொண்ட பின் 2022 ஆம் ஆண்டு வரை 20 வருடங்களாக தொழிலாளர்களுக்கு வாழ்கை செலவிற்கேற்ப முறையாக சம்பளம் அதிகரிக்கப்பட வில்லை. அவ்வாறு அதிகரிக்கப்பட்டிருந்தால் பெருந்தோட்ட. தொழிலாளர்களுக்கு இரண்டாயிரத்திற்கும்அதிகமானசம்பளம் அதிகரிக்கப்பட்டிருக்கும். பெருந்தோட்ட தொழிலாளர்கள் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக முதுகெலும்பாக உழைக்கின்றார்கள். அத்தோடு நாட்டில் ஆட்சி அமைப்பதற்கும் வாக்களித்து பங்களிப்பு செய்கின்றார்கள்.இவர்கள் மாத்திரம் ஏன் நாட் கூழிகளாக இருக்க வேண்டும். இவர்களும் இந்த நாட்டு பிரஜைகளாக மதித்து அரச தொழிலாளிகளாக மாற்ற அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். ஏனைய அரச தொழிலாளர்களுக்கு வாழ்கை செலவு புள்ளிக்கேற்ப சம்பளம் அதிகரிக்கப்படுவது போல தோட்டத் தொழிலாளர்களுக்கும் வாழ்கை செலவு புள்ளிக்கேற்ப சம்பளம் அதிகரிக்க வேண்டும். அரசாங்க தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சலுகைகளும் இந்த தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும். இதனை பெற்றுக்கொள்வதற்காக தோட்டத் தொழிலாளர்களையும் அரசாங்க தொழிலாளியாக மாற்ற வேண்டும். பெருந்தோட்ட தொழிலாளர்களை அரச தொழிலாளியாக மாற்றுவதற்கு பாராமன்றத்தில் அங்கம் வகிக்கும் ஆளுங்கட்சி எதிர்கட்சி மலையக உறுப்பினர்கள் குரல் எழுப்ப வேண்டும்.அத்தோடு மலையக பெருந்தோட்ட தொழிலாளர்களின் நலன் விரும்பிகள் கல்விமான்கள் பொது அமைப்புகள் ஒன்றிணைந்து பெருந்தோட்ட தொழிலாளர்களை அரசாங்க தொழிலாளியாக அங்கிகாரம் பெறுவதற்காக குரல் எழுப்ப வேண்டும் என்றார்.

# ஆசிரியர்களுக்கு இலவச மருத்துவ முகாம்




**( வி.ரி. சகாதேவராஜா)**

கல்முனை, சாய்ந்தமருது, சம்மாந்துறை பகுதியில் இருக்கின்ற டாக்டர் ஜமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையினர் பாடசாலை ஆசிரியர்களுக்கு இலவச மருத்துவ முகாமை நடத்தி வருகின்றனர். நேற்று (9) புதன்கிழமை சம்மாந்துறை செந்நெல் சாஹிரா மகாவித்தியாலயத்தில் இலவச மருத்துவ முகாம் இடம் பெற்றது. நூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர்களும் பொதுமக்களும் இந்த முகாமில் கலந்து கொண்டு பயன்பெற்றார்கள். டாக்டர் ஜமீல் ஞாபகார்த்த வைத்தியசாலையின் பொது முகாமையாளர் எம் எஸ் எம். நஜ்முடீன் தலைமையில் டாக்டர் ஜமால்டீன், டாக்டர் அசாப் ஆகியோரின் கண்காணிப்பில் இந்த முகாம் நடாத்தப்பட்டது.

சம்மாந்துறைக் கிளை முகாமையாளர் ஹாபி பிஸ்ருல் மஜீத் நெறிப்படுத்தலில், சம்மாந்துறை பிரதேசத்தில் இதுவரை அல் மர்ஜான் முஸ்லிம் மகளிர் கல்லூரியிலும் ,செந்நெல் சாஹிரா மகாவித்தியாலயத்திலும் முகாம் நடைபெற்றஇருக்கின்றது. மாதத்திற்கு மூன்று பாடசாலைகள் . அதன் அடிப்படையில் கல்முனை வலயத்திலே இதுவரை ஸாகிரா கல்லூரி ,சாய்ந்தமருது அல்ஹிலால் மகா வித்தியாலயம், அல் ஜலால் வித்தியாலயம் ஆகியமூன்று பாடசாலைகளில் இடம் பெற்றன. எதிர்வரும் வாரங்களில் காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியில் இடம்பெற இருக்கின்றது என பொது முகாமையாளர் நஜ்முடீன் தெரிவித்தார்.

# கல்முனையில் கட்டாக்காலிகளை கைப்பற்றும் நடவடிக்கை முன்னெடுப்பு

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்டபிரதேசங்களில்கட்டாக்காலி மாடுகள் கைப்பற்றப்பட்டு, அவற்றின் உரிமையாளர்களிடம் தண்டப்பணம் அறவிடும் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருவதாக மாநகர முதல்வர் செயலகம் தெரிவித்துள்ளது. இது குறித்து முதல்வர் செயலகம் இன்று வியாழக்கிழமை (10) வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் பிரதான வீதிகள், பொதுச் சந்தைகள், மைதானங்கள், கடற்கரை, சிறுவர் பூங்காக்கள், பஸ் நிலையங்கள் மற்றும் பொது இடங்களில் கட்டாக்காலிகளின் தொல்லைகள் அதிகரித்து காணப்படுகின்றன. இதனால் வாகனப் போக்குவரத்துகளுக்கு பெரும் இடையூறுகள் ஏற்படுவதுடன் விபத்துகளும் சம்பவிக்கின்றன. அத்துடன் கட்டாக்காலிகளினால் பாதசாரிகளும் வர்த்தகர்களும் நுகர்வோரும் பொது மக்களும் பெரும் அசௌகரியங்களையும் ஆபத்துகளையும் எதிர்நோக்கி வருகின்றனர். மேலும் சூழல் மாசடைவதற்கும் துர்நாற்றம் வீசுவதற்கும் ஏதுவாக அமைகின்றன. இவற்றைக் கருத்தில் கொண்டே மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 84 இன் கீழ் மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றகீப் விடுத்துள்ள பணிப்புரையின் பிரகாரம் கல்முனை மாநகர சபையினால் கட்டாக்காலி மாடுகள் கைப்பற்றப்பட்டு, அவற்றின் உரிமையாளர்களிடம் தண்டப்பணம் அறவிடும் நடவடிக்கை கடந்த சில தினங்களாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

ஆகையினால், மாடுகளை வளர்ப்போர் அவற்றை பொது இடங்களில் நடமாடுவதில் இருந்து கட்டுப்படுத்தி, தங்களுடைய பொறுப்பில் வைத்திருக்குமாறும் இதனை மீறி, மாடுகள் பொது இடங்களில் நடமாடுமாயின் அவை கைப்பற்றப்பட்டு, உரிமையாளர்களிடம் இருந்து ஒவ்வொரு மாட்டுக்கும் தலா 3000 ரூபா வீதம் தண்டப்பணம் அறவிடப்படும் என்பதையும் தண்டப்பணத்தை உடனடியாக செலுத்தி மீட்கப்படாத மாடுகள், மாநகர சபைக்கு உரித்தாக்கப்படும் எனவும் தொடர்ந்தும் இச்செயற்பாடு இடம்பெறுமாயின் உரிமையாளர்களுக்கு எதிராக பொலிஸாரின் ஒத்துழைப்புடன் நீதிமன்றம் ஊடாக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் கல்முனை மாநகர சபையினால் பகிரங்க அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

# 'அகம் ஆதரவு கரங்கள்' அமைப்பின் முதலாவது வருட அகவை




**க.ருத்திரன்**

மட்டக்களப்பு வந்தறுமூலை 'அகம் ஆதரவு கரங்கள்' அமைப்பின் முதலாவது வருட அகவை தினம் அண்மையில் சிறப்பாக மட்.கல்குடா இலுக்குப் பொத்தானை மலைமகள் வித்தியாலயத்தில் மாணவர்களின் பங்குபற்றுதலுடன் கொண்டாடப்பட்டது. அமைப்பின் உறுப்பினர்கள் மிகவும் பின்தங்கிய மேற்படி பாடசாலைக்கு சென்று இறையருள் வேண்டி பாடசலையில் பொங்கலிட்டு விசேட பூசை நிகழ்வுகளில் ஈடுபட்டனர். அகம் ஆதரவு கரங்கள் அமைப்பின் தலைவர் த.நவதீபன் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் முதலில் குறித்த அமைப்பின் சின்னம் பொறிக்கப்பட்ட ரீ சேட் அறிமுகம் செய்யப்பட்டு அமைப்பில் செயல்படுகின்ற அனைத்து உறுப்பினர்களுக்கும் அவை வழங்கப்பட்டது. பின்னர் நிகழ்ச்சிகளை ஆரம்பித்து வைக்கும் முகமாக மங்கள விளக்கேற்றலுடன் முதலாவது வருட அகவை நாளுக்கான கேக் வெட்டப்பட்டு மாணவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. தொடர்ந்து மாணவர்களுக்கு பாடசலையின் சின்னம் மற்றும் பெயர் பொறிக்கப்பட்ட களுத்துப்பட்டி மற்றும் புத்தகப் பைகளும் வழங்கி வைக்கப்பட்டது. பின்னர் அகவை நாளை நினைவு படுத்தும் முகமாக பாடசாலை வளவினுள் தென்னங் கன்றும் மேற்படி அமைப்பின் உறப்பினர்களால் நடப்பட்டது.

இதேவேளை குறித்த அமைப்பானது கடந்த 4.11.2021 ஆம் ஆண்டு வந்தாறுமூலை பிரதேசத்திலுள்ள இளைஞர்களினால் சமூகசேவை நோக்கம் கருதி ஆரம்பிக்கப்பட்ட அமைப்பாகும்.இது கடந்த ஒருவருட காலப்பகுதியில் மாவட்டத்திலுள்ள பல்வேறு இடங்களுக்கும் சென்று கல்வி,கலாச்சாரம்,அடிப்படை வசதிகளற்ற மக்களின் நலன் கருதி பல்வேறுபட்ட வாழ்வாதார உதவிகளை வழங்கி வருகின்ற ஒரு மனித நேய அமைப்பாக செயற்பட்டு வருகின்றது. நிகழ்வில் பாடசாலை அதிபர் எம்.தவநாயகம்,ஊடகவியலாளர் க.ருத்திரன் ஆகியோர்கள் அதிதிகளாக கலந்து கொண்டு அகம் ஆதரவு கரங்கள் அமைப்பிற்கு தங்களது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்தனர்.

# வேலைக்காக பெண்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதை வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் நிறுத்தி வைத்துள்ளன

**(சில்மியா யூசுப்)**

நாளை முதல் அமுலுக்கு வரும் வகையில் திறமையற்ற துறைகளில் வேலைக்காக பெண்களை வெளிநாடுகளுக்கு அனுப்புவதை வேலைவாய்ப்பு முகவர் நிலையங்கள் நிறுத்திவைத்துள்ளன. சுற்றுலா விசா மூலம் பெண்கள் திறமையற்ற வேலைகளுக்கு செல்வதை தடுக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது. அண்மைக்காலமாக சுற்றுலா விசா மூலம் சென்ற பெண்கள் பல்வேறு துன்புறுத்தல்களுக்கு உள்ளானமை தொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவர்களில் பெரும்பாலோர் ஓமன் மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ 'ில் வேலைக்காக வெளிநாடு சென்றனர். சுற்றுலா விசாவில் அவர்கள் அந்த நாடுகளுக்கு வந்துள்ளதாக அந்நாட்டில் உள்ள இலங்கை தூதரகங்கள் தெரிவித்துள்ளன. வேலையின்றி தவிக்கும் பெண்களை பொறுப்பேற்க எந்தவொரு அமைப்போ அல்லது நபரோ முன்வராததால், குறித்த பெண்கள் நாட்டில் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதேவேளை, இவ்வருடம் ஜனவரி மாதம் முதல் நவம்பர் மாதம் வரையான காலப்பகுதியில், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் விமான நிலையப் பிரிவின் அதிகாரிகள், சுற்றுலா விசாவைப் பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் தொழில் நிமித்தம் வெளிநாடு செல்ல முயற்சித்த 586 பேரை திருப்பி அனுப்ப நடவடிக்கை எடுத்துள்ளனர்



# வாகனேரி பிரதேசத்தில் மோட்டார் குண்டுகள் மீட்பு



**க.ருத்திரன்**

மட்டக்களப்பு வாகநேரி பிரதேசத்தில்மோட்டார்குண்டுகள்அடங்கிய வெடிப்பொருட்கள் சிலவற்றினை நேற்று புதன்கிழமை (9) மீட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.வாழைச்சேனை காகித ஆலை விசேட அதிரடிப்படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலினையடுத்து குறித்த பிரதேசத்திற்கு சென்று அவற்றினை மீட்டுள்ளனர்.இதன்போது ரி-81 ரக மோட்டார் குண்டுகள் 20 மீடக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தனர்.2 இரும்பு பெட்டியில் அடைத்து வைக்கப்பட்டு நிலத்தில் புதைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் அவை மீட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.மீட்க்கப்பட்ட குண்டுகளை செயலிழக்கச் செய்யும் பொருட்டு வாழைச்சேனை பொலிசார் ஊடாக வாழைச்சேனை மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தின் அனுமதியினை நாடியுள்ளனர்.குறித்த பிரதேசமானது கடந்த காலத்தில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழ் இருந்த பிரதேசமாகும்.

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வழிகாட்டல் செயலமர்வு



**எஸ்.சபேசன்**

இவ் வருடம் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான வழிகாட்டல் செயலமர்வு எருவில் கல்வி சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் எருவில் பிரதேசத்தினைச் சேர்ந்த அ.மகேஸ்வரன் அவர்களின் நிதி உதவி மூலம் நேற்று இடம்பெற்றது.

இச் செயலமர்வானது எருவில் கண்ணகி மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றதுடன் அப்பாடசாலையின் அதிபர் சி.சத்தியநாதன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் எருவில் கல்வி சமூக அபிவிருத்தி ஒன்றியத்தின் ஸ்தாபகத் தலைவர் சமூகசேவகர் தமிழரசுக் கட்சியின் எருவில் வட்டாரத்தின் பிரதித் தலைவர் அ.வசிகரன், அவ் இமைப்பின் ஆலோசகர் தாஸன், பொருளாளர் ஆசிரியருமான பொ.புஸ்பநாதன் பிரதித் தலைவர் ஆசிரியருமான த.தர்மசீலன் மற்றும் அமைப்பின் உறுப்பினர்கள் கலந்து சிறப்பித்தனர். வளவாளர்களாக கி.கலேஜன் எஸ் .அருள்குமார் ஆகியோர் செயற்பட்மை குறிப்பிடத்தக்கது

# அடாத்தாக கையகப்படுத்தப்பட்ட தளவாய் கிராம காணி உரிய மக்களுக்கு கையளிக்கப்பட வேண்டும்




**ஹஸ்பர்**

கிண்ணியா பிரதேசத்தில் வனஜீவராசி திணைக்களத்தினர் அடாத்தாக கையகப்படுத்தப்பட்ட தளவாய் கிராம காணி உரிய மக்களுக்கு கையளிக்கப்பட வேண்டும் என நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் திருமலை மாவட்ட அமைப்பாளரும் கிண்ணியா நகர சபை உறுப்பினருமான எம். எம்.நஸ்ருதீன் தெரிவித்தார். கிண்ணியாவில் உள்ள திருமலை மீடியா போரத்தின் ஊடக இல்லத்தில் இன்று (10)இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில் இம் மக்கள் 1990களில் யுத்த சூழ் நிலை காரணமாக வெளியேற்றப்பட்டு கிண்ணியா நகர் பகுதிகளில் வாழ்ந்து வந்த நிலையில் 30 வருட காலமாக காணியினை இழந்த நிலையில் வாழ்ந்து வருகிறார்கள் தற்போது வனஜீவராசி திணைக்களத்தினர் கபளீகரம் செய்துள்ளனர் இம் மக்களின் சொந்த நிலம் உரியவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்

.1986ம் ஆண்டு காலப்பகுதியில் 70 குடும்பங்கள் வாழ்ந்தமைக்கான தேர்தல் இடாப்பின் பதிவுகள் ஆதாரங்களை எடுத்துக்காட்டுகிறது ஆனாலும் இம் மக்களுடைய சொந்த காணிகள் அவர்களுக்கு வழங்கப்படாமை வனஜீவராசி திணைக்களத்தினர் அடாத்தாக கையகப்படுத்தியுள்ளனர்.இது உரிய மக்களுக்கு சென்றடைய வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்தார்.

# ஒன்றுகூடுவோம் இலங்கை நிறுவனத்தால் மாணவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி




**(ஓட்டமாவடி மேலதிக நிருபர்)**

கிழக்கு மாகாணத்தில் இயங்கி வரும் தன்னார்வ தொண்டு நிறுவனமான ஒன்றுகூடுவோம் இலங்கை நிறுவனத்தால் கிழக்கு மாகாணத்திலுள்ள பாடசாலை மாணவர்களின் தலைமைத்துவ பண்புகளை அதிகரிக்கும் நோக்கில் பயிற்சிகளை அளித்து வருகின்றது. இந்த நிலையில் அந்த பயிற்சி நிறுவனத்தின் தொடர் ஒழுங்கில் ஓட்டமாவடி கல்விக் கோட்டத்திற்குட்பட்ட வாழைச்சேனை வை.அஹமட் வித்தியாலயத்திலும் மாணவர்களுக்கான பயிற்சிகளை அண்மையில் வழங்கியது.

மாணவர்களின் கற்றல் உற்சாகத்தை அதிகரித்து கற்றலை விருப்புக்குரிய செயலாக மாற்றும் இணைப்பாடவிதான செயற்பாடுகளாக இந்த பயிற்சி அமைந்திருந்ததோடு மாறிவரும் உலகில் சவால்களை வெற்றிகொள்ளப்பழகும் சிறார்களை உருவாக்கும் நோக்கில் இந்த பயிற்சி நெறிகள் பாடசாலை மட்டத்தில் நடைபெற்று வருகின்றது.

பெற்றோர்களுக்கான கருத்தரங்குகளை ஒழுங்குபடுத்தி அவர்களது விருப்பங்களையும் பெற்றதன் பிற்பாடே இந்த பயிற்சி நெறிகள் வழங்கப்பட்டு வருவதாக அதிபர் தெரிவித்தார். விளையாட்டு முறை மூலமானதும்,குழச்செயற்பாடுகள் மூலமாகவும் அமையப்பெற்ற இந்த பயிற்சி நெறியில் மாணவர்களுடைய தனிப்பட்ட ஆளுமை பண்புகள் வெளிப்பட சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட்டு வருவதோடு பிரச்சினை விடுவித்தல் முறையில் அமைந்த கருத்து வெளிப்படுத்தல் செயற்பாடுகளும் இப்பயிற்சி நெறியில் வழங்கப்பட்டன.

மாணவர்களுக்கான சிற்றுண்டி மற்றும் பகல் போசனத்துடன் முன்னெடுக்கப்பட்டு வரும் இப்பயிற்சி நெறி முடிவில் கலந்து கொண்டு பயன்பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. ஒன்றுகூடுவோம் இலங்கை அமைப்பின் கிழக்கு மாகாண ஒருங்கிணைப்பாளர் ஜே.எம். சில்மிர்,நிறுவனத்தின் மட்டக்களப்பு மாவட்ட சிறுவர் கற்கைகள் துறை ஆசிரியை சௌமியா சஜீகரன் மற்றும் நிறுவனத்தின் தொண்டர்கள் என பலரும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# நோயாளர் காவு வண்டி கையளிப்பு



**அபு அலா**

மத்திய சுகாதார அமைச்சினால் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சுக்கு கிடைக்கப்பெற்ற நோயாளர் காவு வண்டி கையளித்து வைக்கும் நிகழ்வு (09) திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் பிராந்திய பணிப்பாளர் வைத்தியர் வி.பிரமானந் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே. முரளிதரன் கலந்துகொண்டு நோயாளர் காவு வண்டியை மூதூர் தள வைத்தியசாலைக்கு வழங்கி வைத்தார். குறித்த வண்டியை வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் வைத்தியர் வி.கயல்விழி பெற்றுக்கொண்டார்.

இந்நிகழ்வில், கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் டி.ஜீ.எம்.கொஸ்த்தா உள்ளிட்ட வைத்தியர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். மூதூர் தள வைத்தியசாலைக்கு மிக அத்தியவசியத் தேவையாக இருந்துவந்த நோயாளர் காவு வண்டி தொடர்பில், வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழுவினர் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் (திருமதி) ஜே.ஜே.முரளிதரனை கடந்த மாதம் திருகோணமலை சுகாதார அமைச்சில் சந்தித்து கலந்துரையாடியதையடுத்து, இன்று நோயாளர் காவு வண்டி வழங்கி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# தோப்பூரில் மாணவப் பாராளுமன்ற தேர்தல்



**(அ . அச்சுதன்)**

திருகோணமலை – தோப்பூர் அல்ஹம்றா மத்திய கல்லூரியின் மாணவப் பாராளுமன்ற தேர்தல் கல்லூரியின் முதல்வர் எஸ்.ஏ.றஹீம் தலைமையில் இன்று வியாழக்கிழமை (10) கல்லூரி ஆராதனை மண்டபத்தில் இடம்பெற்றது. இவ் மாணணவர் பாராளுமன்ற தேர்தலில் 501 மாணவர்கள் வாக்களிப்பதற்கு தகுதி பெற்றுள்ளதாகவும் 91 உறுப்பினர்களை தெரிவு செய்ய 145 வேட்பாளர்கள் போட்டியிடுவதாகவும் இத் தேர்தலில் தேர்தல் ஆணையாளராக செயற்படும் கல்லூரி முதல்வர் தெரிவித்தனர். தேர்தல் கடமையில் கல்லூரியின் ஆசியர்கள் நியமிக்கப்பட்டிருந்தனர். இதன்போது மாணவர்கள் ஆர்வத்துடன் வாக்களிப்பில் ஈடுபட்டதையும் அவதானிக்க முடிந்தது.

நாள்தோறும் சுபீட்சம் நிகழ்நிலை
பத்திரிகையை பார்வையிட
www.supeedsam.com

மட்டக்களப்பில் Multi Purpose Store
(களஞ்சிய) அறை வாடகைக்கு உண்டு

களஞ்சியத்தின்
விஸ்தீரணம்
1512 சதுர அடி.
நீளம் 42 அடி,
அகலம் 35
அடி, உயரம் 18 அடி.
அலுவலக அறை
170 சதுர அடி.
குளியல் அறை,
மலசலகூடங்கள் 02,
நீர் வசதி, மின்சார வசதி ,
போக்குவரத்து வசதி
(பிரதான வீதியில்
அமைந்துள்ளது)



அமைவிடம்:
திருகோணமலை வீதி,
ஆறுமுகத்தான் குடியிருப்பு, மட்டக்களப்பு.
தொடர்புகளுக்கு: whatsapp: 0041 76 345 23 95

கிழக்கு மண்ணிலிருந்து நாளாந்தம் வெளிவரும்
சுபீட்சம் தினசரி மின்னிதழில் மிகவும் குறைந்த
கட்டணத்தில் விளம்பரம் செய்யுங்கள்.
தொடர்புகளுக்கு : 077 6645232, 075 2331738
supeedsam@gmail.com

# மன்னார் றோட்டறிக் கழக செயற்பாட்டிற்கு பூரண ஒத்துழைப்பு




**(வாஸ் கூஞ்ஞ)**

மன்னாரில் றோட்டறிக் கழகம் மிகவும் சிறந்த முறையில் இயங்கி வருவதையிட்டு பெருமிதம் கொள்ளுகின்றோம் என இலங்கைக்கான றோட்டறி கழக ஆளுநர் புபுது டி சொய்சா இவ்வாறு மன்னார் றோட்டறிக் கழகத்துக்கு புகழாரம் சூட்டினார். கடந்த திங்கள் கிழமை (07) இலங்கைக்கான றோட்டறிக் கழக ஆளுநர் புபுது டி சொய்சா இதன் மாவட்டத்துக்கான செயலாளர் நாயகம் , மற்றும் உதவி ஆளுநர் றொட்டேரியன் ஜெயராஜா உள்ளிட்டோரும் மன்னாருக்கு விஜயத்தை மேற்கொண்டனர்.

மன்னாருக்கு வருகை தந்திருந்த றோட்டறிக் குழுவினரை மன்னார் றோட்டறி கழகத்தின் தலைவர் றொபின் ஜெயருபன் தலைமையில் மன்னார் குழுவினர் இவர்களை வரவேற்றனர். இதைத் தொடர்ந்து மன்னார் ஆகாஷ் ஹோட்டலில் நடைபெற்ற கூட்டத்தில் மன்னார் றோட்டறிக் கழகத் தலைவருக்குரிய சின்னம் அணிவிக்கப்பட்டதுடன் இந்நாளில் இவ் கழகத்தில் சேர்ந்த புதிய உறுப்பினர்களுக்கும் றோட்டறிக் கழக சின்னங்கள் அணிவிக்கப்பட்டன.

இதைத் தொடர்ந்து இங்கு இலங்கைக்கான றோட்டறி ஆளுநர் புபுது டி சொய்சா றோட்டறிக் கழக உறுப்பினர்கள் மத்தியில் உரையாற்றுகையில் மன்னார் றோட்டறிக் கழகம் கடந்த 3 ஆண்டுகளாக மிகவும் சிறப்புடன் செயற்பட்டு வருவதை நோக்கக்கூடியதாக இருக்கின்றது. அத்துடன் இவ் கழகமானது கடந்த காலங்களில் பொதுமக்கள் பணியிலும் பொது விடயங்களிலும் அதிக அக்கறை காட்டிவருவது மிகவும் மகிழ்ச்சிக்குரியதும் மெச்சக்கூடியதாகவும் இருக்கின்றது என தெரிவித்தார்.

அத்துடன் இனிவரும் காலங்களிலும் மன்னார் றோட்டறிக் கழகம் இன்னும் தொடர்ந்து சிறப்புடன் இயங்கும் என்றும் இவ் கழக அங்கத்தவர்கள் தங்களுக்குள்ளும் மற்றயவர்களுக்கும் சிறந்த முன்னுதாரணமாகவும் பயனுடையதாகவும் செயற்படும் என தான் நம்புவதாக குறிப்பிட்டார். உங்கள் கழக செயற்பாட்டிற்கு தேவையான சகல ஒத்துழைப்புக்களையும் என்னால் நிச்சயம் செய்துதர முடியும் எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற இரத்ததான நிகழ்ச்சி




**(ரக்ஸனா)**

மட்டக்களப்பு மாவட்டம் மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தினரின் ஏற்பாட்டில் இரத்ததான முகாம் ஒன்று புதன்கிழமை (09.11.2022) பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரெத்தினம் தலைமையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. களுவாஞ்சிகுடி வைத்தியசாலை மற்றும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை இரத்த வங்கி பிரிவு ஆகியோரின் ஒத்துழைப்புடன் இந்த இரத்ததான முகாம் இடம்பெற்றது.

இதன்போது பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், விளையாட்டு கழகங்கள், இளைஞர் கழகங்கள், கிராம அபிவிருத்தி சங்கங்கள், மாதர் கிராம அபிவிருத்தி சங்கங்கள் மற்றும் பொதுமக்கள் என நூற்றுக்கும் அதிகமானோர் கலந்து கொண்டு குருதிக்கொடை வழங்கினர். பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரெத்தினம் தலைமையில், பிரதேச செயலக நலன்புரிச் சங்கத்தினரின் ஏற்பாட்டில் தொடர்ச்சியாக இது ஐந்தாவது தடவையாக நடைபெற்ற இரத்த தான நிகழ்வு இது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஆலையடிவேம்பு சின்னமுகத்துவாரம் ஆற்றுமுகப்பிரதேசம் அகழ்ந்துவிடப்பட்டது



**வி.சுகிர்தகுமார்**

அம்பாரை மாவட்டம் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட சின்னமுகத்துவாரம் ஆற்றுமுகப்பிரதேசம் இன்று அகழ்ந்துவிடப்பட்டது. அடை மழை காரணமாக ஆற்றை அண்டிய வயல் பிரதேசங்கள் உள்ளிட்ட ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஏக்கர் விவசாய நிலங்கள் நீரில் மூழ்கியுள்ளதாகவும் இதனால் விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டுளளதாகவும் விவசாய அமைப்பின் பிரதிநிதிகள் தெரிவித்ததை அடுத்து களநிலவரத்தை ஆராய்ந்த பின்னரே ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தால் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இதன் பிரகாரம் சின்னமுகத்துவார ஆற்றுமுகப்பிரதேசத்தை அகழ்ந்து மேலதிக நீரை வெளியேற்றி விதைக்கப்பட்ட வயல் நிலங்களை பாதுகாத்து விவசாயிகளை பாதுகாக்கும் முகமாக இந்நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. குறித்த விடயம் தொடர்பில் ஆலையடிவேம்பு பிரதேச செயலகம் முக்கிய தரப்பினருடனும் கலந்துரையாடி அவசியதேவை கருதி முகத்துவாரம் அகழ்ந்துவிடப்பட்டது.

இந்நடவடிக்கையின் போது ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தின் கிராம உத்தியோகத்தர் பி.கிருசாந்தன் அபிவிருத்தி உத்தியோகத்தர் சி.மதிசுதன் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பி.அரியநாயகம் உள்ளிட்டவர்கள் பிரசன்னமாயிருந்தனர்.

# விவசாய இரசாயன விற்பனையாளர்களுக்கான விசேட தெளிவூட்டல் செயலமர்வு




**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் விவசாய இரசாயன விற்பனையில் ஈடுபடும் விற்பனையாளர்களுக்கான விசேட தெளிவூட்டல் செயலமர்வொன்று நேற்று (09) திகதி மட்டடக்களப்பு மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது. மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் இடம்பெற்ற விசேட தெளிவூட்டல் செயலமர்வில்
பீடை நசினிகள் பதிவாளர் நாயகம் லசந்த ரட்ணவீர, மட்டக்களப்பு மாவட்ட விவசாய பணிப்பாளர் இராஜதுரை ஹரிகரன், பிரதி விவசாய பணிப்பாளர் (விரிவாக்கம்) வீ.பேரின்பராசா ஆகியோர் கலந்துகொண்டு தெளிவுபடுத்தல்களை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது சட்ட விரோத விவசாய இரசாயன வியாபாரம், பீடை நாசினி பாவனை, பீடை நாசினி இறக்குமதி சட்டங்கள், தரமான இரசாயன உரங்களை, பீடை நாசினிகளை பெற்றுக்கொடுத்தல், மனிதனுக்கும் சூழலுக்கும் தீங்கு விளைவிக்காத இரசாயனங்களை இறக்குமதி செய்து கொடுப்பது, பாவனையாளருக்கு பாதிப்புகள் அற்ற இரசாயன உரங்களை பாவனையாளர்களுக்கு பெற்றுக்கொடுப்பது, விற்பனையாளர்கள் கடைப்பிடிக்க வேண்டிய சட்டதிட்டங்கள், விளம்பரப்படுத்தல்கள் போன்ற மேலும் பல விடயங்கள் தொடர்பாக விரிவான முறையில் தெளிவுபடுத்தல்கள் இடம்பெற்றுள்ளது.

இதன்போது பிரதேச செயலகங்களின் பிரதேச செயலாளர்கள், உதவிப் பிரதேச செயலாளர்கள், ஊசழி டுகைந – ளுசை டுயமெய அமைப்பின் பிரதிநிதிகள், சுகாதாரத் துறையினர், இரசாயண கிருமிநாசினிகளை இறக்குமதி செய்யும் நிறுவனங்களின் பிரதிநிதிகள், விவசாயிகள், விவசாய துறை சார்ந்த உத்தியோகத்தர்கள், பீடைநாசி விற்பனையாளர்கள் உள்ளிட்ட ஏனைய துறைசார் திணைக்களங்களின் அதிகாரிகளும் கலந்துகொண்டு பயனடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# போதைப் பொருள் பாவனை தடுப்பு விழிப்புணர்வு



தம்பலகாமம் பிரதேச செயலாளர் திருமதி ஜெ.ஸ்ரீபதி அவர்களின் வழிகாட்டலுக்கமைய கிஃசிராஜ்நகர் முஸ்லிம் மகா வித்தியாலயம் உயர்தர மாணவர்களுக்கான போதைப்பொருள் பாவனைத் தடுப்பு விழிப்புணர்வு நிகழ்வு நேற்று(2022.11.09) சமுதாய சீர்திருத்த அபிவிருத்தி உத்தியோகத்தர் பா.ஹம்சபாலன் அவர்களால் பாடசாலை மண்டபத்தில் வைத்து இடம் பெற்றது. இவ் விழிப்புணர்வு நிகழ்வில் மாணவர்களுக்கு போதைப்பொருள் பாவனையிலிருந்து மீண்டெழுதலுக்கான தந்துரோபாயமுறையினை உளவளதுணை உத்தியோகத்தர் திருமதி. கொன்சலீன் மாவளன் அவர்களால் விளக்கமளிக்காப்பட்டதுடன் மாணவர்களுக்கான சத்திய பிரமாணம் சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தரால் செய்து கொள்ளப்பட்டது.

# நாட்டின் பொருளாதாரநெருக்கடியை உரிய முறையில் தீர்ப்பதற்கான அழுத்தங்களை அரசுக்கு வழங்கவும்

## நல்லாட்சிக்கான தேசிய முன்னணி அமெரிக்க உயர்ஸ்தானிகரிடம்வேண்டுகோள்

**(ரக்ஸனா)**

நாட்டின் பொருளாதார நெருக்கடியை உரிய முறையில் தீர்ப்பதற்கான அழுத்தங்களை அரசுக்கு வழங்குமாறும் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி அமெரிக்க உயர்ஸ்தானிகரிடம் வேண்டுகோள். கிழக்கு மாகாணத்தில் பொருளாதார நெருக்கடியினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கான வாழ்வாதார உதவிகளை வழங்குமாறும்,நாட்டின் பொருளாதார நெருக்கடியை உரிய முறையில் தீர்ப்பதற்கான அழுத்தங்களை அரசுக்கு வழங்குமாறும் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி அமெரிக்க உயர்ஸ்தானிகரிடம் வேண்டுகோள்.



அமெரிக்காவின் இலங்கைக்கான தூதுவர் ஜூலி ஜங்க் அவர்கள் கிழக்கு மாகாணத்திற்கான விஜயம் ஒன்றினை மேற்கொண்டு செவ்வாய்கிழமை (08.11.22) மட்டக்களப்பிற்கு வருகை தந்திருந்தார். இதன்போது நல்லாட்சிகான தேசிய முன்னணி(NFGG) சார்பில் கட்சியின் பொதுச் செயலாளரும் நகரசபை உறுப்பினருமான ALM சபீல் நளீமி, மற்றும் தலைமைத்துவ சபை உறுப்பினரும் நகரசபை உறுப்பினருமான திருமதி பஹ்மியா ஷரீப் ஆகியோர் அவருடனான சந்திப்பொன்றினை மேற்கொண்டிருந்தனர்.

தற்பொழுது நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நெருக்கடியினால் கிழக்கு மாகாணத்தில் உள்ள மக்களும் குறிப்பாக பெண்களும் சிறுவர்களும் மிக மோசமாக பாதிக்கப்பட்டிருக்கின்ற விடயங்கள் குறித்து மிகத் தெளிவான கலந்துரையாடல் ஒன்றினை உயர்ஸ்தானிகருடன் முன்னெடுத்திருந்தனர். மக்கள் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாவட்டங்களில் முதலாம் இடத்தில் காணப்படுகின்ற மட்டக்களப்பு மாவட்டம், தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகளினால் மிக மோசமான நிலைக்கு தள்ளப்பட்டிருக்கின்றது.

யுத்தம் அதற்கு பின்னரான, சுனாமி, ஈஸ்டர் குண்டு தாக்குதல், கொவிட் போன்ற பல்வேறு பட்ட காரணங்களினால் தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டு வந்த கிழங்கிலங்கை மக்களின் வாழ்வாதாரம் தற்போது மீண்டும் இந்த பொருளாதார நெருக்கடியினால் கேள்விக்குறியாகியுள்ளது. பொருளாதார நெருக்கடிகளின் காரணமாக இன்று அதிகமான ஆண்களும் பெண்களும் வெளிநாடுகளுக்கு வேலை வாய்ப்புகளை நோக்கமாகக் கொண்டு செல்கின்றனர். இதனால் அதிகமான பிள்ளைகள் தற்பொழுது பாதுகாப்பற்ற சூழலில் வாழும் நிர்ப்பந்தத்திற்கு தள்ளப்பட்டுள்ளனர். அதேபோல பாலூட்டும் தாய்மார்கள், கர்ப்பிணித் தாய்மார்கள், பாலர்கள் என பலரும் போசாக்கு குறைபாட்டினால் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே அவர்களுக்கான உடனடி வாழ்வாதார உதவிகளை வழங்குவதற்கு அமெரிக்க தூதரகம் முன்வரவேண்டும் என அவரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. மக்களின் இந்த கஷ்டமான நிலைமைக்கு காரணம் ஊழலும், மோசடியும் நிறைந்த கடந்தகால ஆட்சிமுறைமையே ஆகும். ஆகவே இந்த பொருளாதார நெருக்கடியினை உரிய முறையிலும் உடனடியாகவும் தீர்ப்பதற்கான உயர் மட்ட அழுத்தங்களை இலங்கை அரசுக்கு அமெரிக்கா வழங்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுக்கப்பட்டது.

பொருளாதார ரீதியில் மிகவும் பின்தங்கியுள்ள கிழக்கு இளைஞர் யுவதிகளுக்கான இலவச ஆங்கில மொழிப்புலமை , மற்றும் தொழில்சார் பயிற்சிகளை வழங்குகின்ற வகையில் மட்டக்களப்பினை மையமாகக் கொண்டு பயிற்சி நிலையமொன்றினை இங்கு ஆரம்பிக்க வேண்டும் எனவும் இதன்மூலம் முறையான தொழில் வாய்ப்புகளை அவர்கள் பெற்றுக் கொள்வதற்கு வழிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் எனவும் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி அமெரிக்க உயர்ஸ்தானிகரிடம் கோரிக்கை ஒன்றினை முன்வைத்திருந்தது. மட்டக்களப்பு ஈஸ்ட் லகூன் ஹோட்டலில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் அமெரிக்க உயர்ஸ்தானிகரிடம் தங்களது கோரிக்கைகளை தேபுபு ஆவண வடிவிலும் கையளித்தமை குறிப்பிடத்தக்கது.